## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

### மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

### புவியியல்

சுட்டெண் :- ..........................................

தரம் : - 11

நேரம் :- 3. 00 மணித்தியாலம்

- **கவனிக்க.**

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
❖ சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

### வினாத்தாள் – I

❖ ***01 முதல் 10 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.***

**(01)** உயிர்க்கோளம் நிலைத்திருப்பதற்கு மிக அவசியமான வளிமண்டலப் படை ………..………… ஆகும்.

**(படை மண்டலம் / மாறன் மண்டலம் / இடை மண்டலம்)**

**(02)** நீர்க்கோளத்தில் ஏறத்தாழ ……………………………………………. வீதமானது சமுத்திர நீராகும்.

**(71 சத / 28 சத / 97.5 சத)**

**(03)** கிழக்காசிய வலயத்தில் இலத்திரனியல் கைத்தொழில் துறையில் பலம்வாய்ந்த நாடாக ………………………………………………….. தோற்றம் பெற்றுள்ளது.

**(ஜப்பான் / சீனா / தென்கொரியா)**

**(04)** இலங்கையில் புராதன காலத்தில் சமனல வாவியைச் சூழவுள்ள பகுதிகளில் ………………… கைத்தொழில் நடைபெற்றது என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

**(மட்பாண்ட / கப்பல்கட்டும் / இரும்புருக்கு)**

**(05)** உலகிலேயே மிகப் பெரிய ஏரியாக …………………………………….. ஏரி காணப்படுகின்றது.

**(விக்டோரியா ஏரி / சுப்பீரியர் ஏரி / அயர் ஏரி)**

**(06)** ……………பாறைகள் தாய்ப்பாறைகள் என அழைக்கப்படுகின்றன.

**(தீப் / உருமாறிய / அடையற்)**

**(07)** உலகில் வருடாந்த காரீய உற்பத்தியில் 60 சதவீதத்தினைக் கொண்டுள்ள …………………….. பிரதான காரீய உற்பத்தி நாடாக இருக்கின்றது.

**(இலங்கை / இந்தியா / மெக்சிக்கோ)**

**(08)** உலக மக்களில் 60 சதவீதமானோர் ……………………………..….. கண்டத்தில் வாழ்கின்றனர்.

**(ஆபிரிக்கா / ஐரோப்பா / ஆசியா)**

(09) நாத்தாண்டியா, சிலாபம், வல்லிபுரம் போன்ற பிரதேசங்களில் பரம்பிக் காணப்படும் கனிய மணல் …………………….. ஆகும்.

**(இல்மனைற் / சிலிக்கா / ரூற்றைல்)**

(10) மலைநாட்டுப் பிரதேசங்களில் வீதிகளை அமைப்பதற்குப் பயன்படும் தரைத்தோற்ற அம்சம் …………………….. ஆகும்.

**(பள்ளத்தாக்கு / நீர்ப்பிரிநிலம் / கணவாய்)**

❖ **11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவை சரியாயின் 'ச' இனையும், பிழையாயின் 'பி' இணையும் சுற்றி வட்டமிடுக.**

(11) அலுமினியம் கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் இரும்புருக்கின் கேள்வி 65% மாகக் குறைவடைந்தது. **ச / பி**

(12) உலகில் அதிகளவான அகழிகளைக் கொண்ட சமுத்திரமாக பசுபிக் சமுத்திரம் விளங்குகின்றது. **ச / பி**

(13) ஆர்ஜென்ரீனாவில் காட்டுப் பயிராகக் காணப்பட்ட இறப்பர் படிப்படியாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பெருந்தோட்டப் பயிராக வளர்ச்சியடைந்தது. **ச / பி**

(14) ஹக்கல, யால, ரிட்டிகல ஆகிய மூன்றும் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குப் பிரதேசங்களாகும். **ச / பி**

(15) இலங்கையில் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் பத்து வருடங்களுக்கு ஒரு முறை சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகின்றது. **ச / பி**

❖ **16 முதல் 20 வரையிலான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களுள் 'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரலைப் பொருத்தினால் வரும் சரியான விடையைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(16) உலகின் பிரதான ஏரிகள் சில 'அ' நிரலிலும், அவை அமைந்துள்ள கண்டங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் தொடர்பு படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. தங்கனிக்கா ஏரி | (A) ஆசியா |
| 2. பைக்கால் ஏரி | (B) அவுஸ்திரேலியா |
| 3. அயர் ஏரி | (C) வட அமெரிக்கா |
| 4. பெரிய சிலேவ் ஏரி | (D) ஆபிரிக்கா |

(1) CDBA (2) DABC (3) BDCA (4) BADC [……...]

**(17)** உலகின் பிரதான சமுத்திரங்கள் 'அ' நிரலிலும், அங்கு அமைந்துள்ள தீவுகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்பு படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. இந்து சமுத்திரம் | (A) கிறீன்லாந்து |
| 2. பசுபிக் சமுத்திரம் | (B) கியூபா |
| 3. அத்திலாந்திக் சமுத்திரம் | (C) மாலைதீவு |
| 4. ஆட்டிக் சமுத்திரம் | (D) ஜப்பான் |

(1) DCAB  (2) DACB  (3) CDBA  (4) CDAB  [……....]

**(18)** உலகில் பயிரிடப்படும் பயிர்கள் சில 'அ' நிரலிலும், அவற்றுக்குரிய பொருத்தமான மண் வகை 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்பு படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. கோதுமை | (A) வண்டல்மண் |
| 2. இறப்பர் | (B) சேணாசம் மண் |
| 3. தேயிலை | (C) கபுக்கலந்த செம்மண் |
| 4. நெல் | (D) செம்பூரான் மண் |

(1) BCDA  (2) CBAD  (3) DCBA  (4) DABC  [……....]

**(19)** இலங்கையில் உள்ள வனசீவராசிகள் ஒதுக்குகள் சில 'அ' நிரலிலும், அவற்றுள் உள்ளடங்கும் பிரதேசங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்பு படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. சரணாலயங்கள் | (A) சிங்கராஜ |
| 2. தேசிய பூங்காக்கள் | (B) கதிர்காமம் |
| 3. இயற்கை ஒதுக்குகள் | (C) குமண |
| 4. வன ஒதுக்குகள் | (D) திருகோணமடு |

(1) DCBA  (2) CDBA  (3) CBDA  (4) BCDA  [……....]

**(20)** இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில் பிரதேசங்கள் சில 'அ' நிரலிலும், அங்கு இடம் பெறும் பாரம்பரிய உற்பத்திகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்பு படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. பிலிமத்தலாவ | (A) முகமூடிகள் |
| 2. அம்பலாங்கொட | (B) றேந்தை |
| 3. கொக்கல | (C) மரத்தளபாடங்கள் |
| 4. மொரட்டுவ | (D) பித்தளை அலங்காரப் பொருட்கள் |

(1) CDBA  (2) DBAC  (3) BDAC  (4) DABC  [……....]

The National e-learning Portal for The General Education

❖ ***21 முதல் 25 வரையான வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்துப் பூரணப்படுத்துக.***

**(21)** புவித்தகடுகள் மூடிப்பகுதியில் செயற்படுகின்ற …………….……………………… காரணமாக நகர்கின்றன.

**(22)** ……………………………….………….. சீனாவின் இலத்திரனியல் உற்பத்திகளுக்கான பிரதான சந்தையாகக் காணப்படும் நாடாகும்.

**(23)** இலங்கைக்குத் தேயிலைப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியவர் ஆங்கிலேயரான ………………………..………………… ஆவார்.

**(24)** புத்தளம் மாவட்டத்திலுள்ள …………………..…………. என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி நிலையத்தினால் வலுச்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.


**(25)** இலங்கையில் …………………………………….. செயற்றிட்டத்தின் மூலம் கிராம மட்டத்தில் தொழிலின்றியிருக்கும் தனிநபரின் பொருளாதார சக்தியை மேம்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

❖ ***26 முதல் 28 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைப் பயன்படுத்துக.***


**(26)** இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து …………… ஆகும்.

**(27)** வட மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டம் ……………. என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

**(28)** சேதன உரமத்திய நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தைக் காட்டும் எழுத்து …………… ஆகும்.



❖ ***29 ஆம் மற்றும் 30 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் கீழே தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்துக.***




***மாகாணங்களின் சனத்தொகைப் பரம்பல்***

***(29)*** இலங்கையில் அதிகளவு சனத்தொகைப் பரம்பலைக் கொண்ட மாகாணம் …………………… ஆகும்.

***(30)*** இலங்கையின் மொத்த சனத்தொகைப் பரம்பலில் 5% மான மக்கள் வாழ்கின்ற மாகாணமாக …………………………….. காணப்படுகின்றது.

❖ ***31 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினை உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.***

***(31)*** புவி மேற்பரப்புக்கு மிக அண்மித்ததாகக் காண்படும் வளிமண்டலப் படை

*(1)* படை மண்டலம்
*(2)* வெப்ப மண்டலம்
*(3)* மாறன் மண்டலம்
*(4)* இடை மண்டலம் […….…]

***(32)*** இலங்கையில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்குக் காரணமாக நெற்செய்கை அழிவினை எதிர்நோக்கும் நெல்லுற்பத்தி சுற்றாடல் வலயம்

*(1)* ஈரவலயம்
*(2)* இடை வலயம்
*(3)* வரண்ட வலயம்
*(4)* மலைப்பகுதி […….…]

***(33)*** தென்னை முக்கோண வலயத்தினுள் உள்ளடங்கும் பிரதேசங்கள்

*(1)* ரன்ன, மித்தெனிய, தங்கல்ல
*(2)* ரன்ன, குருநாகல், புத்தளம்
*(3)* கொழும்பு, களுத்துறை, சிலாபம்
*(4)* கொழும்பு, குருநாகல், சிலாபம் […….…]

❖ ***34 ஆம் மற்றும் 35 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் கூற்றுக்களைப் பயன்படுத்துக.***

(A) – வரட்சி

(B) – CFC வாயுப் பயன்பாடு

(C) – நீரின் கிடைப்பனவு

(D) – புவி வெப்பம்

***(34)*** ஒரு காரணியின் அதிகரிப்பு மற்றொரு காரணியின் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் கூற்றுக்கள் இரண்டினைக் கொண்ட விடை

(1) BD (2) BA (3) AD (4) CD [……....]

***(35)*** ஒரு காரணியின் அதிகரிப்பு மற்றொரு காரணியின் குறைத்தலுக்குக் காரணமான கூற்றுக்கள் இரண்டினைக் கொண்ட விடை

(1) AD (2) BD (3) AC (4) CD [……....]

***(36)*** இலங்கையின் 1 : 50, 000 இடவிளக்கப்படத்தில் 14cm நீளமான வீதியின் உண்மையான நீளம்

(1) 9 km (2) 7 km (3) 28 km (4) 15 km [……....]

***(37)*** மத்திய மலைநாட்டினையும், சூழவுள்ள தாழ்நிலப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய முழு இலங்கையினதும் பொதுவான நீர் வடிகால் பாங்கு

(1) மரநிகர் வடிகாலமைப்பு

(2) அளியடைப்பு வடிகாலமைப்பு

(3) ஆரை வடிகாலமைப்பு

(4) கங்கண வடிகாலமைப்பு [……....]

***(38)*** சமாதிநிலை, அவுக்கண புத்தர் சிலைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பாறை வகை

(1) பளிங்கடுக்குப்பாறை

(2) சலவைக்கல்

(3) சுண்ணக்கல்

(4) உறைகளிக்கல் [……....]

***(39)*** பின்வருவனவற்றுள் புதுப்பிக்கக் கூடிய வளங்கள்

(1) காடுகள், பாறைகள் (2) வளமான மண், பாறைகள்

(3) இரும்பு, நிலக்கரி (4) நீர், காற்று [……....]

***(40)*** கைத்தொழிற் புரட்சியின் பின்னர் ஐரோப்பாவில் பருத்திப்புடவைக் கைத்தொழிலில் தனியுரிமையைப் பெற்றுக் கொண்ட நாடு

(1) பிரான்ஸ் (2) ஜேர்மனி

(3) பிரித்தானியா (4) ஸ்பெயின்

(40 x 1 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## வினாத்தாள் – II

- **கவனிக்க.**

❖ **பகுதி – I இலுள்ள அ, ஆ. இ வினாப் பகுதிகள் கட்டாய வினாக்கள்.**

❖ **பகுதி – II கட்டமைப்புக் கட்டுரை வகை வினாக்கள் 7 ஐக் கொண்டது.**

- **அதில் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

**(01)** (அ) தரப்பட்டுள்ள 1 : 50, 000 இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இல (i) முதல் இல (v) வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

(i) படத்தில் இல (1) குறிக்கும் அம்சம்

**(கடற்கரை / வெளியரும்பியபாறை / பாதுகாக்கப்பட்ட வனம்)**

(ii) படத்தில் இல (4) இனால் குறித்துக் காட்டப்படும் நிர்வாக எல்லை

**(மாவட்டம் / மாகாணம் / பிரதேச செயலர் எல்லை)**

(iii) படத்தில் இல (2) குறிக்கும் கரையோர அம்சம்

**(தீவு / முனை / குடா)**

(iv) பிரதேசத்தினூடாகப் பாயும் பிரதான ஆற்றின் போக்கில் அவதானிக்கக் கூடிய அம்சம்

**(பின்னிய ஆறு / மியாந்தர் வளைவு / ஆற்றிடைத்தீவு)**

(v) வட பிரதேசத்தில் காணப்படும் சதுர அடைப்பினுள் சேவை வழங்கும் நிறுவனங்களில் ஒன்று

**(வைத்தியசாலை / தபாலகம் / உபதபாலகம்)**

இல (vi) முதல் இல (x) வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.

(vi) தரப்பட்ட படப்பிரதேசம் அமைந்துள்ள மாவட்டம்

(vii) பிரதேசத்திற்குத் தேவையான நீரை வழங்கும் பிரதான மூலம் எது?


(viii) படமாக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் பயிரிடப்படுகின்ற பெருந்தோட்டப் பயிர் ஒன்றைக் குறிப்பிடுக.

(ix) பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யக்கூடிய கைத்தொழில் ஒன்று தருக.

(x) கரையோரத்தை அண்மித்துக் காணப்படும் அமைக்கப்பட்ட பிரதேசத்தினுள் வாழும் மக்கள் பின்பற்றும் மதங்கள் இரண்டு தருக.

*(10 புள்ளிகள்)*

(ஆ) கீழே வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினை நன்கு அவதானித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




The National e-learning Portal for The General Education

(i) படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள A, B, C ஆகிய நதிகளுள் ஓப் நதியினைக் குறிக்கும் எழுத்து எது?

(ii) படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களில் அந்தீஸ் மலைத்தொடரினைக் குறிக்கும் எழுத்து எது?

(iii) படத்தில் G, H, J ஆகிய கடல்களில் மத்திய தரைக் கடலைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

(iv) படத்தில் K, L, M எழுத்துக்களினால் காட்டப்படும் நாடுகளுள் ஆசியாவுக்கு வெளியே நெல் பயிரிடப்படும் மடகஸ்காரைக் குறிக்கும் எழுத்து எது?

(v) படத்தில் P, Q, R ஆகிய எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் நாடுகளுள் மோட்டார் வாகன உற்பத்தியில் முக்கியத்துவம் பெற்ற தென்கொரியாவைக் குறிக்கும் எழுத்து எது?

*(5 புள்ளிகள்)*

(இ) தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தினை நன்கு அவதானித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) படத்தில் A, B, C எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களில் தேயிலை விளைவிக்கப்படும் கண்டி மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து எது?


(ii) படத்தில் D, E. F ஆகிய எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள இடங்களுள் உவர்நீர் மீன் பிடிக்கும் பிரசித்தமான அறுகம்குடாவைக் குறிக்கும் எழுத்து எது?

(iii) படத்தில் G, H, J ஆகிய எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களுள் சித்திரநெல்லா பயிரிடப்படும் மாத்தறை மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து எது?

(iv) படத்தில் K, L, M ஆகிய தீவுகளில் நெடுந்தீவைக் குறிக்கும் எழுத்து எது?

(v) படத்தில் P, Q, R ஆகிய நகரங்களில் புராதன உல்லாசப் பயண நகரமான பொலன்னறுவையைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

*(5 புள்ளிகள்)*




**பகுதி – II**

**(02)** (i) மனித நடவடிக்கைகள் காரணமாக வளிமண்டலத்தைச் சென்றடையும் நச்சு வாயுக்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*


(ii) (a) நீர்க்கோளத்தின் நிலைத்திருப்புக்கு அடிப்படையாக அமையும் செயன்முறை எது?

(b) உயிர்க்கோளத்தின் செயன்முறைகளைப் பாதிக்கும் இரண்டு காரணிகளையும் எழுதுக.

*(2 புள்ளிகள்)*

(iii) மனிதன் கற்கோளத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*




**(03)** (i) மேலே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் A, B, C, D ஆகிய இறப்பர் செய்கையில் ஈடுபடும் நாடுகளைப் பெயரிடுக.

*(2 புள்ளிகள்)*

(ii) (a) இறப்பர் செய்கைக்கு அவசியமான வெப்பநிலை, மழைவீழ்ச்சி அளவுகளைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(b) இறப்பர் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் நான்கினைத் தருக.

*(1 புள்ளி)*

(iii) இறப்பர் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

*(5 புள்ளிகள்)*

**(04)** (i) இலங்கை சுற்றுலா அதிகார சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களில் இரண்டினைப் பெயரிடுக.

*(2 புள்ளிகள்)*

(ii) சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பாக

(a) எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினையும்


*(2 புள்ளிகள்)*

(b) போக்குகளில் ஒன்றினையும் குறிப்பிடுக.

*(1 புள்ளி)*

(iii) சுற்றுலாக் கைத்தொழில் மூலம் இலங்கைக்கு கிடைக்கின்ற இரு நன்மைகளைச் சுருக்கமாக விவரிக்க.

*(5 புள்ளிகள்)*




**(05)** (i) மேலே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் E, F, G, H ஆகிய எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகன உற்பத்தி நாடுகளைப் பெயரிடுக.

*(2 புள்ளிகள்)*

(ii) (a) கடந்த காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளே மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணியில் திகழ்ந்தமைக்கான காரணம் யாது?

*(1 புள்ளி)*

(b) தற்போது மோட்டார் வாகனக் கைத்தொழில் பொருத்தும் கைத்தொழிலாக விருத்தியடைந்து வருவதற்கு அடிப்படையாக அமைந்த இரு காரணங்களைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(iii) உலகின் தயாரிப்புக் கைத்தொழில் எதிர்நோக்கப்படுகின்ற சுற்றாடல் பிரச்சினைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

**(06)** (i) யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வடமேற்குக் கடற்கரையோரங்களிலும் காணப்படும் மயோசீன் சுண்ணக்கல்லின் பயன்பாடுகள் இரண்டு எழுதுக.

*(2 புள்ளிகள்)*

(ii) (a) எரிமலைச் செயற்பாட்டினால் உருவாகும் பாறைவகையைப் பெயரிடுக.

*(1 புள்ளி)*

(b) பாறைகளைப் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(iii) மண் உருவாக்கக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

**(07)** (i) மானிட அபிவிருத்திக் குறிகாட்டியில் உள்ளடங்கும் இரு குறிகாட்டிகளைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(ii) இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(iii) (a) இலங்கையில் நகர அபிவிருத்தியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.

*(2 புள்ளிகள்)*

(b) நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழற் சமநிலைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாதவாறு மேற்கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இரு காரணிகளின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக.

*(3 புள்ளிகள்)*

**(08)** (i) காலநிலை மாற்றம் என்றால் என்ன?

*(2 புள்ளிகள்)*

(ii) புவிக்கோளம் வெப்பமடைவதில் செல்வாக்குச் செலுத்தும்

(a) மானிட செயற்பாடுகள் இரண்டினையும்

*(2 புள்ளிகள்)*

(b) இயற்கைக் காரணி ஒன்றினையும் குறிப்பிடுக.

*(1 புள்ளி)*

(iii) காலநிலை மாற்றங்களினால் மானிடச் செயற்பாடுகளின் மீது ஏற்படும் தாக்கங்கள் இரண்டினை முன்வைத்துச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

The National e-learning Portal for the General Education

## SRI LANKA 1:50,000 SHEET No.91 - MATARA (PART OF)

